# DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.153/2023

**prosecution witness: LW-4 as PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மன்சூர் அலி | தொழில் | : | கறிக்கடை |
| த/பெ. | : | ஆரிப் | வயது | : | 46 |
| ஊர் | : | இராமநாதபுரம் | சமயம் | : | இஸ்லாம் |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**17.02.2026**

( 1, 2, 4 முதல் 10 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி குற்றம் அற்றுவிட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது இராமநாதபுரத்தில் குடியிருந்து கறிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 22.09.2018ம் தேதி மண்டபம் பேரூராட்சி மகாலில் நடைபெற்ற தா.ம.மு.க. செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள அ.சா.1 வுடன் சென்றிருந்தேன். அப்போது அங்கிருந்த சில நபர்கள் அவர்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டார்கள். நானும், அ.சா.1ம் அருகில் சென்று விலக்க முற்பட்டபோது எனக்கும், அ.சா.1க்கும் காயங்கள் ஏற்பட்டன. எனக்கும், அ.சா.1க்கும் ஏற்பட்ட காயங்கள் எதிரியால் ஏற்பட்டதல்ல. மற்றபடி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை..

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 22.09.2018ம் தேதி மாலை 5.15 மணிக்கு மண்டபம் பேரூராட்சி மகாலில் நடைபெற்ற த.ம.மு.க.மாவட்ட செயற்குழு கூட்டத்திற்கு நான் கலந்து கொள்ள அ.சா.1வுடன் சென்றபோது இந்த வழக்கின் 1ம் எதிரியான சாதிக்பாட்ஷா அ.சா.1 முகமது நசீரை வழிமறித்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றால் சரியல்ல. பின்பு எதிரிகள் அனைவரும் த.மு.மு.க. கொடி கட்டியிருந்த இரும்பு பைப்பை எடுத்து அ.சா.1 முகமது நசீரின் தலையின் பின்பகுதியிலும் உடலிலும் அடித்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரி சாதிக் பாட்ஷா அ.சா.1 முகமது நசீர் மூக்கில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் முதுகில் மிதித்து ஊமைக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

2. எதிரிகள் அனைவரும் த.ம.மு.க கொடி கட்டியிருந்த இரும்பு கம்பியை தூக்கி காட்டி அ.சா.1 முகமது நசீரை நோக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேலும் எதிரிகள் அனைவரும் அ.சா.1 முகமது நசீருடன் வந்த என்னையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. மண்டபம் போலீசாரிடம் எதிரிகளுக்கு எதிராக வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.17 10:21:48 +0530

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.153/2023

**prosecution witness: LW-2 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அன்வர் | தொழில் | : | கண்ஸ்ட்ரக்சன் |
| த/பெ. | : | பதுர்சமான் | வயது | : | 54 |
| ஊர் | : | சக்கரக்கோட்டை, இராமநாதபுரம் | சமயம் | : | இஸ்லாம் |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>17.02.2026</u>

( 1, 2, 4 முதல் 10 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி குற்றம் அற்றுவிட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை:-</u>**

1. நான் தற்போது இராமநாதபுரம் சக்கரக்கோட்டையில் குடியிருந்து கன்ஸ்ரக்சன் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. கடந்த 22.09.2018ம் தேதி மாலை 5.15 மணிக்கு மண்டபம் பேரூராட்சி மகாலில் நடைபெற்ற த.ம.மு.க.மாவட்ட செயற்குழு கூட்டத்திற்கு நான் கலந்து கொள்ள சென்றபோது இந்த வழக்கின் 1ம் எதிரியான சாதிக்பாட்ஷா அ.சா.1 முகமது நசீரை வழிமறித்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றால் சரியல்ல. பின்பு எதிரிகள் அனைவரும் த.மு.மு.க. கொடி கட்டியிருந்த இரும்பு பைப்பை எடுத்து அ.சா.1 முகமது நசீரின் தலையின் பின்பகுதியிலும் உடலிலும் அடித்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரி சாதிக் பாட்ஷா அ.சா.1 முகமது நசீர் மூக்கில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் முதுகில் மிதித்து ஊமைக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் த.ம.மு.க கொடி கட்டியிருந்த இரும்பு கம்பியை தூக்கி காட்டி அ.சா.1 முகமது நசீரை நோக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேலும் எதிரிகள் அனைவரும் அ.சா.1 முகமது நசீருடன் வந்த மன்சூர் அலி என்பவரையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. மண்டபம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரிடம் எதிரிகளுக்கு எதிராக வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.17 10:21:54 +0530

DEPOSITION OF THE WITNESS
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண். CC.153/2023
**prosecution witness: LW–1 as PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகம்மது நசீர் | தொழில் | : | செப்பல் தொழில் |
| த/பெ. | : | அப்துல் ஹமீது | வயது | : | 51 |
| ஊர் | : | இராமநாதபுரம் | சமயம் | : | இஸ்லாம் |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>17.02.2026</u>
( 1, 2, 4 முதல் 10 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி குற்றம் அற்றுவிட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>**முதல் விசாரணை:–**</u>

1. நான் தற்போது இராமநாதபுரத்தில் குடியிருந்து செப்பல் கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 22.09.2018ம் தேதி மண்டபம் பேரூராட்சி மகாலில் நடைபெற்ற தா.ம.மு.க. செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றிருந்தேன். அப்போது அங்கிருந்த சில நபர்கள் அவர்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டார்கள். நான் அருகில் சென்று விலக்க முற்பட்டபோது கீழே விழுந்து எனக்கு உடலில் காயங்கள் ஏற்பட்டன. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரியால் ஏற்பட்டதல்ல. இது சம்பந்தமாக மண்டபம் காவல் நிலையத்தில் இந்த சம்பவம் குறித்து தெரிவித்தபோது காவல் துறையினர் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

1. நான் ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். கடந்த 22.09.2018ம் தேதி மாலை 5.15 மணிக்கு மண்டபம் பேரூராட்சி மகாலில் நடைபெற்ற த.ம.மு.க.மாவட்ட செயற்குழு கூட்டத்திற்கு நான் கலந்து கொள்ள சென்றபோது இந்த வழக்கின் 1ம் எதிரியான சாதிக்பாட்ஷா என்னை வழிமறித்து

அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றால் சரியல்ல. பின்பு எதிரிகள் அனைவரும் த.மு.மு.க. கொடி கட்டியிருந்த இரும்பு பைப்பை எடுத்து எனது தலையின் பின்பகுதியிலும் உடலிலும் அடித்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரி சாதிக் பாட்ஷா எனது மூக்கில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் முதுகில் மிதித்து ஊமைக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் த.ம.மு.க கொடி கட்டியிருந்த இரும்பு கம்பியை துாக்கி காட்டி என்னை நோக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேலும் எதிரிகள் அனைவரும் என்னுடன் வந்த மன்சூர் அலி என்பவரையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இராமநாதபுரம் ஆசி மல்டி என்ற தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தபோது மண்டபம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எதிரிகளுக்கு எதிராக புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** இல்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.17 10:22:00 +0530

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.153/2023

**prosecution witness: PW-4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | தொழில் | : சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| த/பெ. | : சுந்தரேசன் | வயது | : 51 |
| ஊர் | : தங்கச்சிமடம் | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>17.02.2026</u>

( 1, 2, 4 முதல் 10 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி குற்றம் அற்றுவிட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை:-</u>**

1) நான் தற்போது சார்பு ஆய்வாளராக மண்டபம் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். மேற்படி வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் அந்தோணி சகாய சேகர் மற்றும் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.கோட்டைசாமி பணி மாறுதல் பெற்றுவிட்ட காரணத்தினாலும் அவருடன் பணிபுரிந்த காரணத்தினால் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதாலும் வழக்கினை விரைந்து விசாரணை செய்து முடிப்பது நீதிநலனுக்கு உகந்தது என்பதாலும் தற்போது நான் கூடுதல் சாட்சியாக வழக்குகோப்பை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்க அனுமதி வேண்டி அனுமதியின் பெயரில் சாட்சியமளிக்கிறேன்.

2) கடந்த 23.09.2018-ம் தேதி இராமேஸ்வரம் மண்டபம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.அந்தோணி சகாய சேகர் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் ஆசி மல்ட்டி தனியார் மருத்துவமனைக்கு காலை 6.00 மணிக்கு சென்று அங்கு சிகிச்சையில் உள்நோயாளியாக இருந்த இராமநாதபுரத்தை சேர்ந்த முகமது நசீர் த/பெ. அப்துல் ஹமீது என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் மாலை 7.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்றவாறு மண்டபம் நிலையக் குற்ற எண்.103/2018 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 147, 148, 323, 324, 379(NH), 506(2) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

3) புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

4) வழக்கு கோப்பை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தேதி

காலை 7.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முஸ்தபா கமால், ஷேக் முகம்மது ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகளான முகம்மது நசீர், அன்வர், நைனா முகம்மது, மன்சூர் அலி, முகம்மது சித்திக், பரக்கத்துல்லா பார்வை மகஜர் சாட்சிகள் முஸ்தபா கமால், ஷேக் முகம்மது ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5) பின்பு எதிரிகளை தேடிவந்த நிலையில் வழக்கின் எதிரிகள் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கை புலன்விசாரணைக்கு சார்பு ஆய்வாளர் கோட்டைச்சாமி எடுத்துக்கொண்டு இராமநாதபுரம் ஆசிக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி தனியார் மருத்துவர் டாக்டர் ஆசிக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் அ.சா.1 க்கு வழங்கிய காயச்சான்றிதழைப் பெற்றுள்ளார். **அ.சா.1 க்கு வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6) இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 341, 294(b), 147, 148, 323, 324, 379(NH), 506(2) இதசவிலிருந்து 341, 294(b), 147, 148, 323, 324, 506(2) இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7) பின்பு இறுதியாக எனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது 341, 294(b), 147, 148, 323, 324, 506(2) இதசவாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:—</u>**

1. வழக்கின் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிடாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன தேதியில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. வழக்கிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.17 10:22:06 +0530